Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.115/2021

Depositions of : PW1

solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தர்மராஜா | தொழில் | : | ஓட்டல் டீ மாஸ்டர் |
| தந்தை பெயர் | : | ஜெயராமன் | தற்போதைய முகவரி | : | எண்.435/1, கிழக்கு தெரு, அம்மையப்பன், உக்கரை 16, திருவிடைமருதூர் தாலுகா, தத்துவாஞ்சேரி போஸ்ட், தஞ்சாவூர் மாவட்டம். |
| வயது | : | 34 | மாவட்டம் | : | தஞ்சாவூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of September - 2025.

(எதிரிகள் ஆஜர்)

<u>முதல் விசாரணை:-</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருக்கிறேன். ஓட்டலில் டீ மாஸ்டராக வேலைப்பார்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் டீ வியாபாரம் செய்து வந்தேன். கடந்த 05.02.2021 அன்று அதிகாலை 2.30 மணியளவில் மங்கலேரி பார்க் அருகே டீ வியாபாரம் செய்து கொண்டிருந்த போது பக்கத்தில் இருந்த ஆட்டோவில் சத்தம் கேட்டது. நான் போய் பார்த்தேன். ஆஜர் எதிரிகள் அங்கே சண்டைபோட்டு கொண்டிருந்தார்கள். அங்கு டீ சாப்பிட வந்தவரிடம் நான் போனை வாங்கி 100க்கு போன் செய்து தகவல் சொன்னேன். கொஞ்ச நேரத்தில் ரோந்து ஜீப் வந்துவிட்டது. அதில் வந்த போலிசார் எதிரிகளை எச்சரித்துவிட்டு போனார்கள். நான் டீ வியாபாரம் பார்க்கப்போனேன். திரும்ப ஒரு மணி நேரம் கழித்து அந்த இடத்திற்கு வந்தபோது அங்கு ஒரு உடல் எரிந்து கொண்டிருந்தது. நான் மீண்டும் 100க்கு போன் செய்து சொன்னேன். கொஞ்ச நேரத்தில் நொலம்பூர்

காவல் நிலையத்தில் இருந்து போலிசார் வந்தனர். அப்போது எதிரிகள் அங்கு இல்லை. பிறகு என்னை அழைத்துக்கொண்டு காவல் நிலையம் போனார்கள். எதிரிகளையும் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து நான் எதிரிகளை அடையாளம் காட்டினேன். காவல் நிலையத்தில் வைத்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது அ.சா. 1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

சம்பவ சமயம் கோரோன காலகட்டம் என்றால் சரிதான். நான் இரவில் டீ விற்பது வழக்கம். இரவில் நான் டீ விற்பதால் போலிசாரின் பாதுகாப்பு தேவை என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் 100க்கு போன் செய்தது என்னிடம் டீ குடிக்க வந்த ஒருவரிடம் இருந்த போனில் தான். அவர் யார் என்று எனக்கு தெரியாது. நான் போலிஸிடம் சண்டை நடப்பதாக சொன்னேன். என்னிடம் செல்போன் கிடையாது. புகார் கொடுக்கும் போது என் மனைவியின் செல்போன் நெம்பரை போலிசாரிடம் கொடுத்தேன். எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினேனா என்றால் ஆம். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை நான் சொன்னேன். போலிசாரின் வற்புறுத்தலில் தான் புகாரில் கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.